**பிரஸார் பாரதி**

**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**06 11 2025 THURSDAY 7.15 PM**

**ஆகாஷவாணி**

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1. **பீகார் சட்டப்பேரவைக்கு இன்று நடைபெற்ற முதல்கட்டத் தேர்தலில் 61 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.**

2. **வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பொருளாதார தன்னிறைவை அடைய வேண்டியது அவசியம் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.**

3. **இந்த ஆண்டு காசி தமிழ் சங்கமம் அடுத்த மாதம் இரண்டாம் தேதி தொடங்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.**

4. **பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட சூறாவளி பாதிப்புகளையடுத்து, அந்நாட்டில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

5. **சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.**

**- இனி விரிவான செய்திகள் ---**

**<<<<<>>>>>>**

பீகார் சட்டப்பேரவைக்கு இன்று நடைபெற்ற முதல்கட்டத் தேர்தலில் சுமார் 61 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பீகாரில் மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் முதல் கட்டமாக இன்று 121 தொகுதிகளில் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்தது.

மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.

இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் வரும் 11-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதனிடையே, இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறும் 122 தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி, ஐக்கிய தனதாதளம், காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சிகளின் தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

Araria, Bhagalpur தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பேசிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, தேசிய ஜனநாயக கூட்டணி, முன்எப்போதும் இல்லாத வகையில், பெரும்பான்மை

பெற்று பீகாரில் மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்கு சம்பாரனின் Bettiah மற்றும் Madhubani ஆகிய இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பீகார் மாநிலத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்றத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தியுள்ளதாக கூறினார்.

காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து Araria-வில் பேசிய அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி அறுதிப்பெரும்பான்மை வெற்றியை பெறும் என்றும், தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றும் தெரிவித்தார்.

Madhubani மாவட்டம் Khajauli-ல் பிரச்சாரம் மேற்கொண்ட ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ், பீகார் மக்கள் மாற்றத்தை விரும்புவதாகவும், தங்கள் கூட்டணி ஆட்சி அமைந்ததும் புதிய பீகாரை உருவாக்குவோம் என்றும் கூறினார்.

<<<<<>>>>>>>

சுயசார்பு திட்டங்களின் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டில் தன்னிறைவை அடைய வேண்டியது அவசியம் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று பாரத ஸ்டேட் வங்கி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அடுத்த தலைமுறைக்கான GST சீர்திருத்தம் அமல்படுத்தப்பட்ட முதல் நாளில் இருந்தே பல்வேறு துறைகளிலும் நேர்மறையான முன்னேற்றங்கள் ஏற்பட தொடங்கியதாக தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில், சுற்றுச்சூழல் தன்னிறைவை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார தன்னிறைவு பற்றி குறிப்பிட்ட நிதியமைச்சர், அடித்தட்டு மக்களுக்கும் தேவையான நிதி கிடைப்பதற்கு வங்கிகள் உதவி வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதில், வங்கிகளின் பங்கு பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மார்ச் மாதம் வரையிலான காலத்தில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டங்களின்கீழ்,

நாட்டின் ஏற்றுமதி 5 லட்சம் கோடி ரூபாயை தாண்டியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டிருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<>>>>>>

காசி தமிழ் சங்கமம் நான்காம் ஆண்டு கொண்டாட்டங்கள் அடுத்த மாதம் இரண்டாம் தேதி தொடங்க இருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவை பகிர்ந்துள்ளார்.

தமிழகத்திற்கும், காசிக்கும் இடையேயான வரலாற்று தொடர்புகளையும், கலாச்சார பெருமைகளையும் வெளிப்படுத்தும் வகையிலான காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி, நாட்டு மக்களின் கலாச்சார ஒற்றுமையை வலுப்படுத்துவதாக அமையும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை கொண்ட காசி தமிழ் சங்கமத்தின் மூலம், ஒரே பாரதம்

**– உன்னத பாரதம் என்ற உயரிய கொள்கை வலுப்பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.**

**இதில் கலந்துகொள்வதற்கு kashitamil.iitm.ac.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.**

**<<<<<>>>>>>**

**குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அங்கோலா மற்றும் போட்ஸ்வானா நாடுகளுக்கு ஆறு நாள் பயணமாக நாளை மறுநாள் புறப்பட்டு செல்கிறார்.**

**புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய கிழக்கு பகுதிகளுக்கான வெளியுறவுத்துறை செயலாளர் திரு Sudhakar Dalela, இந்த நாடுகளுக்கு குடியரசுத் தலைவர் முதல் முறையாக செல்ல இருப்பதாக தெரிவித்தார்.**

**இந்த பயணத்தின்போது, அங்கோலா அதிபர் திரு Joao Manuel Goncalves Laurenco –வுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்த இருப்பதாகவும் அந்நாட்டின் 50-ஆவது ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களில் வரும் 11-ஆம் தேதி குடியரசுத் தலைவர் பங்கேற்க இருப்பதாகவும் அவர் கூறினார்.**

**அங்கோலா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் குடியரசுத் தலைவர், இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாட இருப்பதாகவும் திரு Sudhakar Dalela தெரிவித்தார்.**

<<<<<>>>>>>

மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட திரு சத்பால் சர்மா, திரு ரஜீந்தர் குப்தா ஆகியோர் இன்று மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

அவர்களுக்கு மாநிலங்களவைத் தலைவரும், குடியரசு துணைத்தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

ஜம்மு காஷ்மீரிலிருந்து பிஜேபி சார்பில் திரு சத்பால் சர்மாவும், பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஆம் ஆத்மி சார்பில் திரு ரஜீந்தர் குப்தாவும் மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

<<<<<>>>>>>

இந்தியாவும், இலங்கையும் தங்கள் நாடுகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக பரஸ்பரம் ஆதரவு அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு Sajith Premadasa –வை சந்தித்து பேசியபோது அவர் இந்த உறுதியை அளித்தார்.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்திற்கு மக்களை மையப்படுத்திய கொள்கைகளை பிஜேபி எவ்விதம்

செயல்படுத்தியது என்பது குறித்து அப்போது இலங்கை எதிர்க்கட்சித் தலைவரிடம், திரு ஜெ பி நட்டா விளக்கம் அளித்தார்.

நாட்டு மக்களுக்கு அரசியல் கட்சிகள் எவ்வாறு சிறப்பான சேவையாற்ற முடியும் என்பது தொடர்பான கருத்துக்களை இரு தலைவர்களும் பகிர்ந்துகொண்டனர்.

நலத்திட்டங்களை உறுதியாக செயல்படுத்துவதன்மூலம், கட்சி மற்றும் அரசுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு குறித்தும் திரு ஜெ பி நட்டா அப்போது விரிவாக எடுத்துக்கூறினார்.

<<<<<>>>>>>

இந்தியாவின் டிஜிட்டல் நடைமுறைகள் குறித்து ருமேனியா, ரஷ்யா மற்றும் கத்தார் நாடுகளின் அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தியதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

தோஹாவில் நடைபெறும் சமூக மேம்பாட்டிற்கான இரண்டாவது சர்வதேச உச்சிமாநாட்டுக்கு இடையே, அந்த நாடுகளின் அமைச்சர்களுடன் தாம் விரிவான ஆலோசனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, ருமேனியா அமைச்சர் Petre Florin Manole, ரஷ்ய அமைச்சர் Anton Kotyakov, கத்தார் அமைச்சர் Buthaina Bint Ali Al Jabr ஆகியோரை சந்தித்து இருதரப்பு நல்லுறவுகள் குறித்து திரு மன்சுக் மாண்டவியா ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<<>>>>>>

பிலிப்பைன்ஸில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஏற்பட்ட சூறாவளி பாதிப்புகளைத் தொடர்ந்து, அந்நாட்டில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சூறாவளி தாக்குதலுக்கு இதுவரை 114 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 127 பேர் மாயமாகியுள்ளனர்.

மிக மோசமான இந்த இயற்கை பேரிடர் பல்வேறு மாகாணங்களையும் புரட்டிப்போட்ட நிலையில், தென் சீன கடல் பகுதியில் தொடர்ந்து பாதிப்புகள் நிலவுவதாகவும், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அதிபர் Ferdinand Marcos Junior தெரிவித்துள்ளார்.

பாதிப்புகளை கருத்தில்கொண்டு அவசரகால நிதியை விடுவிக்க ஏதுவாக அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

**ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 11-4, 11-8 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் Anantana -வை வென்றார்.**

**------------------**

**தென்னாப்பிரிக்கா ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணியின் Dhruv Jurel சதம் அடித்தார்.**

**பெங்களுருவில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்து வீச தீர்மானித்ததை அடுத்து முதலில் பேட் செய்த இந்தியா 255 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**Dhruv Jurel அபாரமாக ஆடி 132 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.**

**<<<<<END>>>>>>**